2009 ஜூலை 8] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல mass casualty என்று வந்துவிட்டால், ஒரு Assistant Surgeon தான் கவனிப்பார்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: நமது அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியதைப்போல, பிற மாநிலங்களில் இந்தப் பயிற்சி மருத்துவர்களுக்கும், பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் அதிகமான உதவித் தொகை வழங்குகின்றார்கள். நமது அண்ணன் திரு சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப்போல, அந்த Super Speciality மருத்துவர்களும், பட்ட மேற்படிப்பு மாணவர்களும் பெரும்பாலும் திருமணமானவர்கள்; அவர்களுக்குக் குழந்தைகள் இருக்கும். இந்நிலையில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றவாறு வழங்கவேண்டும். இந்த உதவித் தொகை என்பதை, C.R.R.I. மாணவர்கள் ஒரு வருடம் மட்டும்தான் பெறப் போகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருணைகூர்ந்து, அந்த உதவித் தொகையை உயர்த்தி வழங்கும்படி வேண்டிக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது அ.தி.மு.க. சார்பில் உறுப்பினர் திரு. ஜெயக்குமார், காங்கிரஸ் சார்பில் உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ், பா.ம.க. சார்பில் உறுப்பினர் திரு. ஆறுமுகம் (குறுக்கீடு) வேல்முருகனா? இரண்டும் ஒன்றுதான். வேல்முருகன், ஆறுமுகம் இரண்டும் ஒன்றுதான். (சிரிப்பு) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உறுப்பினர் திரு. டில்லி பாபு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உறுப்பினர் திரு. சிவபுண்ணியம், ம.தி.மு.க. சார்பில் உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை வெளியிட்டிருக்கின்றார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த மாணவர்கள்—பயிற்சி பெறுகின்ற மருத்துவர்கள் என்பதைவிட, மருத்துவத் துறைக்குப் பயிற்சி பெறுகின்றார்களா அல்லது போராட்டத்திற்கான பயிற்சியைப்

பெறுகின்றார்களா என்பது எனக்குப் புரியவில்லை. இவர்களுக்காகப் பரிந்து பேசிய கட்சிகளும் சில கோரிக்கைகளை வைத்துப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்தும்போது, எப்படி நடத்துவது என்பது, காங்கிரஸ் கட்சிக்குத் தெரிந்ததைவிட, பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தெரிந்ததைவிட, தி.மு.க., அ.தி.மு.க.–வுக்குத் தெரிந்ததைவிட, கம்யூனிஸ்டு கட்சித் தோழர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். முதலிலே கோரிக்கை; அதற்குப் பிறகு அரசுக்கு ஒரு நோட்டீஸ்; அதற்குப் பிறகு பேச்சுவார்த்தை; அதற்குப் பிறகு ஓர் ஆர்ப்பாட்டம்; அதற்குப் பிறகு போராட்டம் என்று போராட்ட இலக்கணம் தெரிந்தவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினுடைய நண்பர்கள். அவர்கள் இன்றைக்கு இந்தப் போராட்டத்தை ஆதரிக்கும்போது எனக்கு உள்ளபடியே வேடிக்கையாக இருக்கிறது.

முற்பகல் 11–30

ஏனென்றால், இந்தப் பயிற்சி மருத்துவர்கள் யாரும் இதுவரை என்னையோ அல்லது பொறுப்புள்ள இந்தப் பகுதியினுடைய அமைச்சர்களையோ சந்தித்து இந்தக் கோரிக்கையை வெளியிடவும் இல்லை. இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கவும் இல்லை. போராட்டத்தை ஆரம்பித்துவிட்டு, இதற்குச் சட்டமன்றத்திலே இருக்கின்ற நீங்களெல்லாம் வாதாடி, அந்தக் கோரிக்கையைப் பெற்றுத் தரவேண்டுமென்று தலைகீழாக இதை அறிவித்திருக்கின்றார்கள். இப்படித் தலைகீழாக அறிவித்திருக்கும்போது நாங்கள் என்ன செய்யமுடியும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

உங்களுக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மற்ற மாநிலங்களில் பயிற்சி மருத்துவர்கள் அதிக உதவித் தொகை பெறுகிறார்கள் என்று. ஆனால், மற்ற மாநிலங்களை விசாரித்தால், மற்ற மாநிலங்களில் பட்ட மேற்படிப்புப் பயிற்சி மருத்துவர்களாக யாரையும் தனியாகக் கருதுவதில்லை. பயிற்சிபெறும் காலத்திலேயே அவர்கள் மருத்துவர்களாகக் கருதப்பட்டு, ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதுமாத்திரம் அல்ல; தமிழ்நாட்டிலே இருக்கின்ற பயிற்சி மருத்துவர்களுடைய எண்ணிக்கை அதிகம். மற்ற மாநிலங்களில் இவ்வளவு அதிகம் இல்லை.

எல்லாவற்றிற்கும் மற்ற மாநிலங்களை இன்றைக்குத் துணைக்கு அழைத்து, அதை ஒப்பிட்டுக் காட்டுகின்ற நம்முடைய கட்சித் தலைவர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்; இப்படி உங்களுக்குச் சரி என்று படுவதை மாத்திரம் மற்ற மாநிலங்களைத்

2009 ஜூலை 8] [கலைஞர் மு. கருணாநிதி]

துணைக்கு அழைத்து எங்களோடு வாதாடுகின்றீர்களே, எங்களுக்குச் சரி என்று படுகின்ற சில விஷயங்களில் மற்ற மாநிலங்களை நாங்கள் துணைக்கு அழைத்தால் அப்போது நீங்கள் ஒப்புக்கொள்வதில்லையே, அது ஏன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நீங்கள் அந்த மாணவர்களிடத்திலே கேட்கவேண்டிய கேள்வி, "நீங்கள் முதலமைச்சரைப் பார்த்தீர்களா? அல்லது, அமைச்சரையாவது பார்த்தீர்களா? அல்லது at least, குறைந்தபட்சம் அவர்கள் ஓர் அறிவிப்பு வெளியிட்ட பிறகு, அந்த அறிவிப்பு உங்களுக்குப் போதுமானதாக இல்லை என்ற அந்தக் கருத்தையாவது அரசுக்குத் தெரிவித்தீர்களா? இதைத் தெரிவித்துவிட்டு இதை நீங்கள் ஏற்காவிட்டால், இந்தத் தேதி முதல் நாங்கள் ஆர்ப்பாட்டம் அல்லது போராட்டம் என்று சொன்னீர்களா என்றால், இல்லை".

இதற்கு அவர்களால் பதில் சொல்ல முடியாது. நிச்சயமாக அவர்கள் யாரும் எங்களை அணுகவில்லை. ஒருவேளை, இவர்களைப்போய் ஏன் அணுகவேண்டும்; சட்டசபை இருக்கிறது, பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணியிருப்பார்களேயானால், அது நல்லதல்ல; தொடர்ந்து கடைப்பிடிக்கக்கூடிய நல்ல முறையும் அல்ல.

இருந்தாலும், இங்கே நம்முடைய நண்பர்கள், கட்சிகளின் தலைவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துகளை நாங்கள் அலட்சியப்படுத்தாமல் மீண்டும் அதுபற்றிப் பரிசீலனை செய்து, என்ன செய்யலாம், எப்படி அவர்களைத் திருப்தி அடையச் செய்யலாம் என்பதை நிச்சயமாக எண்ணிப் பார்ப்போம்.

ஆனால், ஒன்று அவர்கள் இரத்த தானம் செய்கிறார்கள் என்றால், போராட்டத்திலே இந்த முறையெல்லாம் சரியல்ல. இரத்த தானம் செய்யட்டும். நாம் அதைத்தானே விரும்புகிறோம். ஆயிரக்கணக்கானவர்கள் இரத்த தானம் செய்தால் அது நல்லதுதான். அது ஒரு போராட்டம் அல்ல. எனவே, போராட்டத்தையும் கற்றுக்கொள்ளுங்கள்; போராட்டத்தை எப்படி நடத்துவது என்பதையும் கற்றுக்கொள்ளுங்கள். இரத்த தானம் செய்கின்றோம் என்று ஒருவர் படுக்கையிலே படுத்துக்கொண்டு அதை, இரத்த தானம் செய்வது என்று சொன்னால், எங்களைப்போல பயந்தாங்கொள்ளி அரசு வேண்டுமானால், அதற்குப் பயப்படலாம். வேறு அரசாக இருந்தால் "பரவாயில்லை இரத்த தானம் செய்யட்டும், இன்று எவ்வளவு பேர் செய்தீர்கள்? நன்றி; நாளைக்கு ஆயிரம் பேருக்கு இரத்த தானம் செய்யுங்கள்" என்று கேட்டுக்கொள்கின்ற அரசாக இருந்தால், உங்களுக்கு ஆபத்து. தானம் செய்கின்ற அளவிற்கு இரத்தம்

உங்களுடைய உடம்பிலே இல்லாமல் போய்விடும். ஆகவே, நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசுவார். பேசுவதற்கு அவர்கள் வருவார்களேயானால், பேசுவார். பேசுவதற்கு நீங்கள் அனுப்பி வைப்பீர்களேயானால், பேசுவார். சில பேர் இந்தப் போராட்டம் நீடிக்கவேண்டும் என்று கருதுகின்றவர்கள் உங்களிடையே யாராவது இருந்தால், தயவுசெய்து அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிடுங்கள். அரசும், இந்த மருத்துவர்களும் ஒன்றாகச் செயல்பட, மக்களுக்குப் பயன்பட உதவுங்கள் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்தைச் சொல்லி முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

3. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, தக்கலை–மேக்கோடு–குலசேகரம் சாலை, வடிகால் வசதி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, தக்கலை–மேக்கோடு–குலசேகரம் சாலை வடிகால் இல்லாமையால், போக்குவரத்துக்குப் பயனற்ற முறையில் பழுதடைந்துள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.